# இவன் ஒரு கொள்கைப் போர் மறவன் இளைஞர்கள் கொண்டாடும் தலைவன்!



ஏழைகளின் தோழன்இவன்!
இவன்ஒரு கொள்கைப் போர் மறவன்
இளைஞர்கள் கொண்டாடும் தலைவன்

சோழன்அவன் பேரன்இவன்
ஏழைகளின் தோழன்இவன்
இவன்ஒரு கொள்கைப்போர் மறவன்....

நீடு பெரும்புகழ் மீட்கவந்தான்!
நீதியை வீதியில் கேட்கவந்தான்!
வாடும் தமிழரைக் காக்கவந்தான்!
வாழ்வின் வறுமையைப் போக்கவந்தான்!
பேரறிஞர் பாதையிலே நேர்செல்வான்!

இவன்ஒரு கொள்கைப்போர் மறவன்
இளைஞர்கள் கொண்டாடும் தலைவன்

தாய்தந்த இதயம் கருணைநிதி
“தளபதி” கலைஞரின் மறுபிரதி!
தடையின்றி ஓடும் ஜீவநதி
தவமகன் எங்கள் உதயநிதி!
பாலையையும் சோலையெனச் சீர்செய்வான்!

இவன்ஒரு கொள்கைப்போர் மறவன்
இளைஞர்கள் கொண்டாடும் தலைவன்

எண்பதில் மதுரையில் தோன்றியது
இளைஞர் அணி.புகழ் ஓங்கியது
நாற்பது நான்காம் ஆண்டில்அது
காலடி வைக்கும் நேரம்இது!
சாதனைமேல் சாதனைகள் மேற்கொள்வான்!

இவன்ஒரு கொள்கைப்போர் மறவன்
இளைஞர்கள் கொண்டாடும் தலைவன்
காலம் வழங்கிய ஆட்சிவரம்
கழகம் நிழல்தரும் ஆலமரம்
நரியார் நினைவும் வீழ்ச்சியுறும்!
பெரியார் கனவும் காட்சிதரும்!
மாட்சிமிகும் ஆட்சிஇங்கே புச்சூடும்
இவன்ஒரு கொள்கைப்போர் மறவன்
இளைஞர்கள் கொண்டாடும் தலைவன்!
சோழன்அவன் பேரன்இவன்
ஏழைகளின் தோழன்இவன்!



(தி.மு.க. இளைஞர்அணி தொடங்கப் பெற்று 44 வதுஆண்டில் அடியெடுத்து வைப்பதை யொட்டி, இதுஒரு பொன் மாலைப் பொழுது என்னும் திரைப் பாடல் மெட்டில் எழுதியது.

கவிச்சுடர் **கவிதைப்பித்தன்**

---

கோடம்பாக்கம் – அடையாறு மண்டலங்களில்

# 24 மணி நேரமும் குடிநீர் விநியோகத் திட்டம்!

## அமைச்சர் கே.என்.நேரு முன்னிலையில் ஒடிசா அரசுடன் ஒப்பந்தம்!

சென்னை, ஜூலை 21- நேற்று (20.07.2023) தலைமைச் செயலகத்தில் நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு முன்னிலையில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்10 (கோடம்பாக்கம்) மற்றும் மண்டலம்13 (அடையாறு) மண்டலங்களில் 24 மணி நேரமும் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளும் திட்டத்திற்கு சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் (CMWSSB) மற்றும் ஒடிசா மாநில நீர்க் கழகம் (Water Corporation of Odhisa (WATCO) இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்களால் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 2022-23 மானியக் கோரிக்கையின்போது, “கோடம்பாக்கம் (பகுதி 10) மற்றும் அடையாறு (பகுதி 13) மண்டலங்களில் தற்போதுள்ள குடிநீர் விநியோக அமைப்பை மேம்படுத்தி 24 மணி நேர குடிநீர் விநியோகத்தை உறுதி செய்வதற்காக ரூ.1958.25 கோடி மதிப்பீட்டில் திட்டங்கள் செயல்படுத்தப்படும்” என அறிவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கோடம்பாக்கம் மற்றும் அடையாறு மண்டலங்களில் அனைத்து குடிநீர் பகிர்மான வலையமைப்பை வடிவமைத்து மற்றும் செயல்படுத்தும் பணிகளை மேற்கொள்வதற்காக திட்ட மேலாண்மை ஆலோசகராக ஒடிசா மாநில நீர்க் கழகத்திற்கு (WATCO) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தால் (CMWSSB) 09.06.2023 அன்று பணி ஆணை வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, இப்பணிகளை மேற்கொள்வதற்காக விரிவான திட்ட அறிக்கை மற்றும் ஒப்பந்தப் புள்ளிகள் தயாரித்து வழங்கிடும் பணிகளை ஒடிசா மாநில நீர்க் கழகத்தினர் (WATCO) மேற்கொள்வார்கள். இத்திட்டத்தின்கீழ் பழுதடைந்துள்ள பழைய குடிநீர்க் குழாய்களை மாற்றியமைத்து, விடுபட்ட தெருக்களில் புதிதாக குழாய் பதிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும், கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளின் கொள்ளளவு அதிகரிக்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ், கோடம்பாக்கம் மண்டலம், வார்டு எண்.127 முதல் 142க்குட்பட்ட கோடம்பாக்கம், வடபழனி, மேற்கு மாம்பலம், தியாகராயர் நகர், சி.ஐ.டி நகர், சைதாப்பேட்டை, ஜாபர்கான் பேட்டை, அசோக் நகர், கே.கே.நகர், எம்.ஜி.ஆர். நகர், நெசப்பாக்கம் (பகுதி), சாலிகிராமம், விருகம்பாக்கம், கோயம்பேடு ஆகிய பகுதிகளில் உள்ள பொதுமக்களும், அடையாறு மண்டலம், வார்டு எண்.168 முதல் 180க்குட்பட்ட ஈக்காட்டு தாங்கல், சைதாப்பேட்டை, கோட்டூர்புரம், இந்திரா நகர், கிண்டி, அடையாறு, பெசன்ட் நகர், வேளச்சேரி, தரமணி மற்றும் திருவான்மியூர் ஆகிய பகுதிகளில் உள்ள பொதுமக்களும் பயன் பெறுவார்கள்.

இந்நிகழ்ச்சியில், முனைவர் தா.கார்த்திகேயன் (அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை), இரா.கிர்லோஷ் குமார், (சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர்), ஜி.மதிவதனன், (அரசு முதன்மை செயலாளர், ஒடிசா மாநில வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை/தலைவர், ஒடிசா மாநில நீர்க் கழகம்), பிரதீப்தா குமார் ஸ்வைன், (மேலாண்மை இயக்குநர், ஒடிசா மாநில நீர்க் கழகம்), வீ.கு.இராமசாமி, (பொறியியல் இயக்குநர், சென்னை குடிநீர் வாரியம்) மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

கழகத் தலைவர்– முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திருச்சியில் உரையாற்றுகிறார்!

# கடலூர் மேற்கு மாவட்டத்தில் உள்ள வாக்குச்சாவடி முகவர்கள் திரளாகப் பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர் அமைச்சர் சி.வெ. கணேசன் வேண்டுகோள்!

திட்டக்குடி ஜூலை 21

கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருச்சியில் உரையாற்றுவது சம்பந்தமாக கடலூர் மேற்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு கூட்டம் சென்னை திருச்சி தேசிய நெடுஞ்சாலை கழுதூரில் உள்ள ஸ்ரீ வெங்கடேஸ்வரா கல்வி நிறுவன வளாகத்தில் மாவட்ட அவைத்தலைவர் டாக்டர்.கோ. நந்தகோபால கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் சி.வி. கணேசன் பேசியதாவது:



டெல்டா மண்டலத்திற்குட்பட்ட மாவட்ட கழகங்களில் உள்ள தொகுதியில் அடங்கிய வாக்குச்சாவடி நிலைகுழு முகவர்கள் (BLA2) பயிற்சி பாசறை கூட்டம் (26.07.2023) புதன்கிழமை காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை திருச்சி ராம்ஜி நகர் கருமண்டபத்தில் நடைபெறுகிறது.

இந்தப் பயிற்சி பாசறை கூட்டத்தில் கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கருத்துரை வழங்குகிறார்கள்.

அதுசமயம் கடலூர் மேற்கு மாவட்டத்தில் உள்ள திட்டக்குடி, விருத்தாசலம், நெய்வேலி, பண்ருட்டி ஆகிய தொகுதிகளில் உட்பட்ட ஒன்றிய நகர பேரூர் கிளை வார்டு ஆகியவற்றில் அடங்கிய வாக்குசாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA 2 )அவசியம் கலந்து கொள்ள வேண்டும்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு கடலூர் மேற்கு மாவட்டத்தில் உள்ள நான்கு தொகுதிகளிலும் தலா 50,000 வீதம் புதிய உறுப்பினர்கள் சேர்க்கை முழுமூச்சியாக நடைபெற வேண்டும் எனவும் இதுவரையில் சேர்த்த உறுப்பினர்களோடு இன்னும் புதிய உறுப்பினர்களை சேர்த்து மாவட்ட கழகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

மேலும் இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்தபடி புதிய வாக்காளர்கள் சேர்த்தல் மற்றும் இடம்பெயர்ந்த வாக்காளர்களின் பெயரை நீக்குதல் போன்ற பணிகளில் அனைவரும் முனைப்போடு செயல்பட வேண்டும். இப்பணிகள் அனைத்தும் விரைவாக நடைபெறுகிறதா என்பதை சம்பந்தப்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகள் ஒன்றிய நகர பேரூர் கிளை வார்டு செயலாளர்கள் கண்காணிக்க வேண்டும் என பேசினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள் ஒன்றிய கழக நகரக் கழக பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் கழக சார்பு அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

# ‘வாட்ஸ் அப்’ பில் வந்த செய்தி!




டெல்லியில் என்.டி.ஏ. ஆலோசனைக் கூட்டம்

**இது தானா சேர்ந்த கூட்டம் கிடையாது சிபிஐ அமலாக்கத்துறை இன்கம் டேக்ஸ் ரைடுகளை வெச்சி மிரட்டி சேர்த்த கூட்டம்**

---

ஒன்றிய பி.ஜே.பி. அரசை வீழ்த்திடவே

# ‘இந்தியா’ -26 கட்சிகளின் கொள்கைக் கூட்டணி!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஜூலை 21- பாசிச ஒன்றிய பி.ஜே.பி. அரசை வீழ்த்திட இந்திய அரசமைப்புச் சட்ட அடிக்கட்டுமானத்தைக்காப்பாற்றிட தோன்றிவிட்டது ‘இந்தியா’ 26 கட்சிகளின் கூட்டமைப்பு! மக்கள் செல்வாக்கை இழந்துவிட்ட பி.ஜே.பி. கூட்டணி வாக்குப் பெட்டிகள்மீது குறிவைக்கும். அதையும்காவல்காக்கும் பணி கடமை 26 கட்சிகளின் கூட்டணிக்கு உண்டு என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

இந்திய ஜனநாயகத்தையும், அதன் வழிகாட்டி நெறியாக இருந்து வழிகாட்டியாக உள்ள இந்திய அரசமைப்புச் சட்டத்தையும் பாதுகாக்க, இந்தியா என்ற நமது நாட்டின் காவலர்களாக ஆகி, இன்றைய ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க. ஆட்சியின் எதேச்சதிகார, அடக்குமுறைக் கொடும் கதிர்வீச்சுகளிடமிருந்து மீட்டெடுக் கும் ஓர் அரிய முயற்சிக்குப் பல்வேறு முக்கிய எதிர்க்கட்சிகளும் ஓர் அணியில் திரண்டு வந்து நிற்பது, வரவேற்கத்தகுந்த சீரிய முயற்சியாகும்!

நாட்டில் இப்போது அறிவிக்கப்படாத நெருக்கடி காலம் நடைமுறையில் இருக்கிறது.

### சட்டத்தின் அடிக்கட்டுமானத்தைத் தகர்க்கும் பி.ஜே.பி. அரசு!

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் மாற்றப்படக் கூடாத அதன் அடிக்கட்டுமானத்தையே மாற்றி, நாளும் சிதைத்து வரும் ஓர் ஆட்சி ஒன்றியத்தில் கடந்த 9 ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்று வருகிறது!

வளர்ச்சி, முன்னேற்றம், கூடுதல் வேலை வாய்ப்பு, விலைவாசி குறைப்பு, விவசாயிகளின் வருமானம் இரண்டு மடங்காகப் பெருக்கம், வெளிநாட்டில் உள்ள இந்தியாவின் கருப்புப் பணத்தையெல்லாம் மீட்டெடுத்துத் திரும்பக் கொண்டு வந்து, இந்தியக் குடிமகன் ஒவ்வொருவரின் வங்கிக் கணக்கிலும் 15 லட்சம் ரூபாய் செலுத்தும் அளவு கொணர்வோம் என்றெல்லாம் ஆசை வார்த்தைகளைக் கூறி, முதலில் பதவியைப் பிடித்தனர் (2014).

பிறகு ‘தேச பக்தி’, அண்டை நாடுகளின் படையெடுப்பிலிருந்து எதிரிகளை முறியடிக்க என்ற சாக்கில் மேலும் கூடுதல் இடங்களைப் பெற்ற நிலையில் (2019) ஆட்சியைப் பிடித்து, தங்களது ஆர்.எஸ்.எஸ். அஜெண்டாவை அமல்படுத்தி வருவது கண்கூடு உலகறிந்த கொடுமை!

### எதிர்க்கட்சிகளை அழிக்கும் திரிசூலங்கள்!

வருமான வரித் துறை, அமலாக்கத் துறை, சி.பி.அய். முதலிய மூன்றும் இவர்களைப் பொறுத்து எதிர்க்கட்சியினரைக் கைது செய்து அழிக்கப் பயன்படும் ‘திரிசூலங்களாக’ நாளும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இதை உச்சநீதிமன்றமே பல வழக்குகளில் தீர்ப்பின் மூலம் வெளிப்படுத்தி உள்ளது வெள்ளிடை மலை!

தேர்தல் ஆணையத்தின் குறிப்பிட்ட உறுப்பினர்களுக்குத் தொடர்ந்து பல ஆண்டு, பல தடவை தொடர் பதவி நீடிப்புகள், அமலாக்கத் துறையில் பதவி நியமனம், பதவி நீடிப்பு மூன்றாவது முறை செல்லாது என்ற தீர்ப்பு, எதிர்க்கட்சியைச் சார்ந்தவரை மக்களவை துணைத் தலைவர் (டெபுடி ஸ்பீக்கர்) நியமனமே செய்யாமல், நான்கரை ஆண்டுகளும் காலியாகவே அவை நடத்தப் பெறும் அதிசய ஜனநாயகம் இப்படி எத்தனையோ!

### இந்தியாவைக் காப்பாற்ற ‘இந்தியா’ கூட்டணி!

இவற்றிலிருந்து மக்களைக் காப்பாற்ற, ‘இந்தியா’ நான்கு எழுத்து எதிர்க்கட்சிக் கூட்டணி (INDIA) எந்த கருநாடகம் தென் மாநிலம் பா.ஜ.க.வை வெளியேற்றி தென்னகத்தில் பா.ஜ.க. No Entry நுழைய முடியாதபடி செய்ததோ அங்கேயே, பாட்னாவுக்கு அடுத்தபடி பெங்களூருவில் கூடிய 26 கட்சிகள் பிரகடனப்படுத்தி யுள்ளது, புதிய நன்னம்பிக்கை முனையாகும்!

கடந்த காலங்களில், மக்களின் அமோக ஆதரவினால் ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க. ஆட்சி அமைந்து விடவில்லை.

சில தேர்தல் வித்தைகளினாலும், உத்திகளினாலும் பண பலம், பத்திரிகைகளின் பலம், பல வகையான ஆள்களின் திரட்டு பலம்மூலம் அதுவும் வெறும் 37 சதவிகித வாக்காளர்களாலேயே ஆட்சியைப் பிடித்த கட்சி. 63 சதவிகித பெரும்பான்மை மக்கள் பிரதமர் மோடி தலைமைக்கு எதிராக இருந்தனர்; இப்போது அவ்வெண்ணிக்கை பல மடங்காக உயர்ந்துள்ளது என்பதற்கு அடையாளம் பிரதமர் மோடி பல நாள்கள் பிரச்சாரம் செய்தாலும்கூட, பா.ஜ.க.வுக்குத் தோல்விதான் மிச்சம் என்ற நிலைக்கு கருநாடகம், அதற்குமுன்பு இமாச்சல பிரதேசம் போன்ற பல எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களே சாட்சியங்களாகும்.

வெளிநாட்டுக்குப் பறந்து செல்லும் பிரதமர் மோடி, மணிப்பூரில் பற்றி எரியும் தீயை அணைக்கப் போதிய அக்கறை செலுத்தவில்லை; ஒருமுறைகூட பிரதமர் அந்த மக்களைச் சந்தித்து ஆறுதல் கூறக்கூட செல்லவில்லையே என்பதை சுட்டிக்காட்டாத ஏடுகளே இல்லை!



பல மாநிலங்களில், வெற்றி பெற்றும் ஆட்சி அமைத்த கூட்டணி கட்சிகளை பிளவுபடுத்தி, கட்சித் தாவலை வைத்து, சட்டமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கி, கட்சி உடைப்பு, கட்சித் தாவல் என்ற பொது ஒழுக்கச் சிதைவை ஏற்படுத்துதல் இவற்றையெல்லாம் தாண்டி, அமலாக்கத் துறைமூலம், ஆளுநர்கள் மூலம் எதிர்க்கட்சியினரை அச்சுறுத் திப் பணிய வைக்கும் ஓர் அரசியல் வியூகம் (அமைச்சர் பொன்முடியின் பழைய வழக்கு இப் போதுபுதிய விசாரணை என்னே, விசித்திரம்!) இவற்றிற்கு முடிவு கட்டவே எதிர்க்கட்சிகள் ஓரணியில் ஒருங்கிணைந்துள்ளன!

### காங்கிரஸ் தலைவர் கார்கேயின் முக்கிய கருத்து!

கடந்த 17, 18,7.2023 ஆகிய இரண்டு நாள்கள் பெங்களூருவில் கூடிய கூட்டத்திற்குப் பிறகு, காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே அவர்கள் ஒரு முக்கிய விஷயத்தைத் தெளிவுபடுத்தியுள்ளது இந்த காலகட்டத்தில் மிகவும் வரவேற்கத்தகுந்த செய்தியாகும்! அதுவும் திருமதி சோனியா காந்தி முன்னிலையில்!

“காங்கிரசுக்குப் பிரதமர் பதவியில் குறியில்லை; எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து தற்போதுள்ள பா.ஜ.க. ஆர்.எஸ்.எஸ். ஆட்சியை அகற்றிடுவது ஒரே முக்கிய குறிக்கோள்; ஜனநாயகம் காப்பாற்றப்பட வேண்டும்‘‘ என்று தெளிவுபடுத்தியுள்ளது மிகவும் தேவையான, முக்கிய அறிவிப்பு ஆகும்.

எதிர்க்கட்சிகளின் பலம் நாளும் உறுதியாவதால், பிரதமர் தம்முடைய திரிசூலத்தில் ஒன்றாகிய அமலாக்கத் துறையை தனது கடைசி ஆயுதமாக தி.மு.க.வை நோக்கிச் செலுத்தி, மேலும் அவரது பலத்தை இழந்து வருகிறார், நாளும்!

### 36 கட்சிகளின் பி.ஜே.பி. கூட்டணியாம்!

பாட்னா கூட்டத்திற்குப் பிறகு மத்திய பிரதேசத்திற்குச் சென்ற பிரதமர் மோடி, தி.மு.க.விற்கு எதிராகக் கடுமையாக பேசியது, அவரது நிலை குலைவைக் காட்டியது.

அதன்பிறகு 18.7.2023 அன்று டில்லியில் பல போணியாகாத, நாடாளுமன்ற உறுப்பினர்களே இல்லாத சில கட்சிகளின்துணைக்கொண்டு கட்சிகளின் எண்ணிக்கையை 36 என்று பெருக்கி, ஊடக வெளிச்ச வித்தைகளில் ஈடுபட்டு வருறார்!

அவரது அரசின் அடக்குமுறை வீச்சும், அச்சுறுத்தும் பேச்சும், அந்த நிலைகுலைவிலிருந்து அவரது கட்சி மீளாதது மட்டுமல்ல, நாளும் கோபத் தீயில் குதித்து, தோல்வியைத் தழுவிட ஆயத்தமாகி வருவது காலத்தின் கட்டாயம்!

### வாக்குப் பெட்டி ஜாக்கிரதை!

எது எப்படியாயினும் இந்தக் காவிகளை ஆட்சியிலிருந்து அகற்ற மக்கள் தயாராகி விட்டனர் வடக்கு முதல் தெற்குவரை கிழக்குமுதல் மேற்குவரை.

மற்றொரு அமைதிப் புரட்சி வாக்குப் பெட்டி மூலமே இருப்பதால், இனி மேல் பா.ஜ.க., அதில் குறியாய் இருந்து வியூகம் வகுக்க முனையக்கூடும்; எதிர்க்கட்சிக் கூட்டணி யினர் அதிலும் கண் வைத்து, காவல் பணி செய்து கடமையாற்றிடவும் வேண்டும்!

நமது ‘திராவிட மாடல்’ ஆட்சிதான் இதற்குத் தொடக்க நம்பிக்கை ஒளி வெற்றி மக்களுக்கே!

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

---

க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில் பி.எச்.சத்யசாய் ஏற்பாட்டில்

# மதுராந்தகம் வடக்கு ஒன்றியத்தில் கலைஞர் நூற்றாண்டு விழாப் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் பி.மூர்த்தி 1000 பேருக்கு நல உதவிகள் வழங்கி சிறப்புரை!

காஞ்சிபுரம், ஜூலை, 21 - காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் மதுராந்தகம் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் மற்றும் ஆயிரம் பேருக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி வையாவூர் ஊராட்சி மாம்பட்டு கிராமத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

கூட்டத்திற்கு காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க. சுந்தர் எம்எல்ஏ தலைமை தாங்கி பேசினார். ஒன்றிய செயலாளர் ஒன்றிய செயலாளர் பி.எச். சத்யசாய் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார்.

ஒன்றிய அவைத் தலைவர் ஆறுமுகம், மாவட்ட விளையாட்டு அணி துணை செயலாளர் தினேஷ்குமார், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் அமுதா ஏழுமலை, எஸ்.ஏழுமலை, மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் வையாவூர் ஊராட்சி மன்ற தலைவர் காமராஜ், கிளை கழக செயலாளர்கள் கமலக்கண்ணன், மணிகண்டன், ராஜா, வெங்கடேசன், பாபு, சீனிவாசன், வெங்கடேசன், மணிகண்டன், தங்கபாண்டியன், கோவிந்தன், தியாகராஜன், தனிகாசலம், சீனிவாசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத் துறை அமைச்சர் பி. மூர்த்தி,காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்எல்ஏ ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றி ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

ஒன்றிய நிர்வாகிகள் தனசேகரன், தமிழரசன், சித்ரா திருஞானசெல்வம், தேவராஜ், மணியன், பார்த்தசாரதி, சுந்தரவரதன், கருங்குழி பேரூர் செயலாளர் சுந்தரமூர்த்தி, பேரூராட்சித் தலைவர் தசரதன், துணைத் தலைவர் சங்கீதா சங்கர் உள்ளிட்ட ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் துர்கேஷ் நன்றி கூறினார்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மதுராந்தகம் வடக்கு ஒன்றிய திமுக நிர்வாகிகள் செய்திருந்தனர்.

---

காஞ்சிபுரத்தில்

# காமாட்சியம்மன் பட்டு கூட்டுறவு சங்க புதிய விற்பனை நிலையம்!

## அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன் – ஆர்.காந்தி தொடங்கி வைத்தனர்!

காஞ்சிபுரம், ஜூலை 21- காஞ்சிபுரம் மாவட்டத்தில் காமாட்சியம்மன் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க புதிய விற்பனை நிலையத்தினை குறு, சிறு நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி ஆகியோர் திறந்து வைத்து முதல் விற்பனையை துவக்கி வைத்தார்கள்.

தமிழ்நாடு அரசின் கைத்தறி ஆதரவுத் திட்டத்தின் கீழ் ரூ. 250.00 இலட்சம் மதிப்பீட்டில் காஞ்சிபுரம் வழக்கறுத்தீஸ்வரர் கோயில் தெருவில் கட்டப்பட்டுள்ள காஞ்சிபுரம் காமாட்சியம்மன் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் புதிய விற்பனை நிலையத்தினை குறு, சிறு நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை அரசு முதன்மைச் செயலாளர் தர்மேந்திர பிரதாப் யாதவ், முன்னிலையில், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி திறந்து வைத்தார்கள்.

இவ்விழாவின்போது, 10 நெசவாளர்களுக்கு நெசவாளர் முத்ரா திட்டத்தின் கீழ் ரூ.5.00 இலட்சம் கடனுதவிக்கான ஒப்பளிப்பு ஆணைகளும், நெசவு செய்யும் முறையை எளிதாக்கவும், நெசவாளர்கள் அதிக வருவாய் ஈட்டி, அவர்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்தவும் கைத்தறி ஆதரவுத் திட்டத்தின் கீழ், 24 நெசவாளர்களுக்கு ரூ.48 லட்சம் மதிப்பில் மின்னணு ஜக்கார்டு இயந்திரங்களும், 7 நெசவாளர்களுக்கு சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத் தொகை ரூ.17.80 இலட்சமும் அமைச்சர் பெருமக்களால் வழங்கப்பட்டது.

மேலும், காஞ்சிபுரம் காமாட்சியம்மன் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க புதிய விற்பனை நிலையத்தின் விற்பனை மேம்படுத்துவது தொடர்பாக அமைச்சர் பெருமக்களால் அறிவுரைகள் வழங்கப்பட்டது.

இவ்விழாவில் கைத்தறி ஆணையர் கே.விவேகானந்தன், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி மோகன், சட்டமன்ற உறுப்பினர்கள் க.சுந்தர், சி.வி. எம்.பி.எழிலரசன், மாநகராட்சி மேயர் எம்.மகாலட்சுமி யுவராஜ், மாவட்ட ஊராட்சி குழுத் துணைத்தலைவர் நித்தியா சுகுமார் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், பட்டுப்பூங்கா நிர்வாகிகள், தமிழ்நாடு ஜரிகை ஆலை மேலாண்மை இயக்குநர், நெசவாளர் பெருமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



செங்கல்பட்டு மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக மக்கள் நல்லுறவு மையம் கூட்டரங்கில், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் மற்றும் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்கள் பெறும் நிகழ்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு பொதுமக்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆ.ர.ராகுல் நாத், நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், எஸ்.எஸ்.பாலாஜி, ஒன்றிய குழுத் தலைவர் இதயவர்மன், ஆர்.டி.அரசு, நகரச் செயலாளர் நரேந்திரன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் செம்பருத்தி துர்கேஷ் உள்ளனர்.